[1974 மார்ச் 16

மாண்புமிகு திரு செ. மாதவன்: எலெக்ட்ரிசிடி போர்ட் சேர்மன் சிவில் இன்ஜினீர் இல்லை. ஆனால் இது போன்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இப்போது புதிய தொழிற்சாலைகளை நாம் ஏராளமாகத் தொடங்குவதால், ப்ரொபஷனல்ஸ், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஒரு கேடர் உருவாக்கவேண்டுமென்று அரசாங்கத்தின கொள்கை. அதன் விவரங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சோப்புத் தொழிற்சாலைகள்

૧ வினா. 466.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரச:

(அ) தமிழகத்தில் சோப்பு சேய்யும் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த ஊரில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): ஆம். தமிழ்நாட்டில் சோப்பு செய்யும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது:—

நிறுவனத்தின் பெயர்.	உரிமம் வழங்கின வருடம்.	உற்பத்தி செய்யும் பொருட்கள்.
ரெமி பர்ஃப்யூம்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1.	1956	சோப்—24 டன்கள். முகப்பவுடர்—60 டன்கள். பற்பசை—18 டன்கள்.
ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) (பிரைவேட்) லிமிடெட், சென்னை-1 (தற்பொழுது டாடா ஆயில் மில்ஸ், கம்பெனி லிமிடெட் வாங்கி நடத்துகிறது).	1962	ரீமெக்ஸ் சோப் —300 டன்கள். சலவை சோப், வாசனை சோப், சோப்புத்தூள் முதலியன—1,350 டன்கள்.
	1967	நிலக்கரித்தாரில் இருந்து செய்யப் படும் சோப்—120 டன்கள்.

திரு. கே.எ. வகாப்: தலைவரவர்களே, இப்போது சந்தன சோப்பு களுக்கு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கும் ஜவ்வாது மலையில் விளையும் சந்தனக் கட்டைகளைக் கொண்டு, சந்தன சோப்புத் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இருக்கிறதா, மத்திய அரசின் அனுமதியோடு தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

1974 மார்ச் 16]

திரு. க. மு. இராசகோபால்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கக்கூடாது.

திரு. க. மு. இராசகோபால்: நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். எனக்கு நீங்கள் வாய்ப்புக்கொடுக்கவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க.மு. இராசகோபால்.

திரு. க. மு. இராசகோபால்: நான் கேட்க விரும்பிய கேள்வி போய் டடுட்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள் 467, 468, 469 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

ஜீப்பு வண்டிகள் வாங்கல்.

* 389 விஞ.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1972–73 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நமது மாநில அரசு எத்தனை ஜிப் மோட்டார்களை கோரியிருந்தது?

(இ) அவற்றில் இதுவரை எத்தனை கிடைத்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) and (இ): 1972-73-ம் ஆண்டில் மாநில அரசு துறைகள் உபயோகத்திற்காக சென்னை போக்கு வரத்து ஆணையர், 280 ஜீப்புக்களுக்கு புதுடில்லி வழங்கல் ஒருவகை செய்தல் தலைமை இயக்குநரிடம் தேவைப்பட்டியல் அனுப்பியிருந்தார். அதில் சனவரி 1974 வரை 273 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அந்த ஜீப்புகள் எந்தெந்த இலாக்காக்களுக்குக் கொடுக்கப்பட்டன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு ப. முத்துசாமி: தலைவரவர்களே, முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீல் டிரைவ் ஜீப்புகள் தான் தரப்பட்டன. இப்போது அப்படிப்பட்ட ஜீப்புகள் கொடுக்காத காரணத்தினுல் பல இடங்களில் கிராமப் புறங்களில் நடைபெறும் வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பார்க்கும் நேரத்தில் காலதாமதம் ஆகிறது. காரணம், மலைப்பகுதி, மணற்பாகானங் பகுதிகளில் செல்ல முடியவில்லை. ஆகவே, முன்போலவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு 4-வீலர் ஜீப் தரஅரசு முன் வருமா?